செய்தி வெளியீடு எண் : 1214 நாள் : 19.07.2022

# மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி அவர்களின் செய்திக் குறிப்பு – 19.07.2022

## மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2022 – 23 கொள்முதல் பருவத்தை 1.09.2022 அன்றே முன்கூட்டி தொடங்கக் கோரியதற்கு ஒன்றிய அரசு ஒப்புதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டு வரலாற்றில் என்றுமில்லாத அளவிற்கு மே மாதம் 24 ஆம் நாளன்றே மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட ஆணையிட்டார்கள்.

தண்ணீர் திறந்த விட்டதோடு நில்லாமல் குறுவை நெல் சாகுபடியும் அறுவடையும் முன்பாகவே தொடங்கிவிடும் என்பதால் 2022 - 23 ஆம் காரிஃப் சந்தைப் பருவக் கொள்முதலை 1.10.2022 அன்று தொடங்குவதற்குப் பதிலாக 1.9.2022 அன்றே ஆரம்பித்திடவும் அப்படிக் கொள்முதல் செய்யும் நெல்லுக்கு 2022 - 23 ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையை வழங்கிட வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்து மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 21.06.2022 அன்று கடிதம் எழுதினார்கள்.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கினங்க, ஒன்றிய அரசின் மாண்புமிகு வர்த்தகம் மற்றும் தொழில், நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் திட்டம் மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. பியுஸ் கோயல் அவர்களை நானும் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் முதன்மைச் செயலாளரும் கோயம்புத்தூரில் 25.06.2022 அன்று நேரில் சந்தித்து முதலமைச்சர் பிரதமருக்கு எழுதிய கடித நகலைக் கொடுத்து 1.09.2022 அன்று நெல் கொள்முதலைத் தொடங்க அனுமதி வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினோம்.

புதுதில்லியில் 05.07.2022 நடந்த மாநில உணவு அமைச்சர்கள் மாநாட்டின் போதும் ஒன்றிய அமைச்சரிடம் இது பற்றி நானும், துறையின் முதன்மைச் செயலரும் நினைவூட்டினோம்.

மேலும், குறுவைப் பருவ நெல் கொள்முதல் தொடர்பாக காவிரிப்பாசன மாவட்ட விவசாயிகளின் ஆலோசனைகனளக் கேட்டிடவும் நெல் கொள்முதலுக்கான ஆயத்தப்பணிகளை உடனே மேற்கொண்டிடவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

அதனத் தொடர்ந்து தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் 12.07.2022 மற்றும் 13.07.2022 ஆகிய இரு நாள்களில் மக்கள் பிரதிநிதிகளையும் விவசாயிகள் பிரதிநிதிகளையும் சந்தித்து ஆலோசித்ததோடு தொடர்புடைய அலுவலர்களின் ஆய்வுக் கூட்டங்களையும் நடத்தினோம்.

அதனடிப்படையில் நெல் கொள்முதலுக்குத் தேவையான பணியாளர்கள் தேர்வு, கொள்முதல் நிலையங்கள் மற்றும் நெல் சேமிப்புக்கான இடங்கள், கொள்முதலுக்குத் தேவையான சாக்குகள் மற்றும் கருவிகள் ஆகியவற்றிற்கான திட்டமிடல் தொடர்பான அறிவுரைகள் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்நிலையில், 2022-23 ஆம் ஆண்டு கொள்முதல் பருவத்தை ஒரு மாதம் முன்னதாக 1.09.2022 அன்றே தொடங்கி நெல் கொள்முதல் செய்ய அனுமதி வழங்கிய ஒன்றிய அரசின் கடிதம் இன்று **(19.07.2022)** கிடைக்கப்பெற்றது. இதனால் 1.09.2022 அன்றிலிருந்தே நெல் கொள்முதல் செய்வதற்கான பணிகளைத் தொடங்க அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

1.09.2022 அன்றே 2022 – 23 பருவ நெல் கொள்முதலைத் தொடங்க பிரதமருக்கு கடிதம் எழுதிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் அனுமதி வழங்கிய மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கும் மாண்புமிகு ஒன்றிய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில், நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் திட்டம் மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனால், 1.09.2022 அன்று முதல் கொள்முதல் செய்யப்படும் பொது ரக நெல்லிற்கு குவிண்டால் ஒன்றிற்கு 2115 ரூபாயும் சன்ன ரகத்திற்கு 2160 ரூபாயும் விவசாயிகளுக்கு கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in